**NFTE BSNL**

**தமிழ் மாநில சங்கம்**

# 55 ii c க்கு வைட்டேஜ் வருமா?

புதிதாக பொறுப்பேற்ற டைரக்டர் (மனிதவளம்) கடந்த மாதம் முக்கிய சங்கங்களை அழைத்து பல்வேறு அம்சங்களை பரிமாறிக் கொண்டுள்ளார். மினிட்ஸ் ஏதும் வெளியாகவில்லை. அதில் விவாதத்திற்கு வந்த ஓர் அம்சம் 55 ii c.

" An Employee may also at any time after completion the age of 55 years Voluntarily retire by giving 3 months notice to the company"

CDA 2006 விதிகளில் 55 ii b குறித்து நாம் பலமுறை விவாதித்து இருக்கிறோம். ஆனால் 55 ii c குறித்து கவனம் செலுத்தவில்லை. 55 வயது முடிந்த எந்த ஊழியரையும் நிர்வாகம் தனது நலன் கருதி ஓய்வு கொடுத்து விடலாம் என்கிறது 55 ii b. அதேபோல் 55 வயது நிறைந்த ஊழியர் தானே முன்வந்து VR ல் செல்ல 55 ii c ஊழியருக்கு வாய்ப்பு அளிக்கிறது. ஆனால் இன்றுள்ள விதிகளின்படி முன்கூட்டியே ஓய்வு பெறுவதற்காக கூடுதலாக எவ்வித பலன்களையும் அவர் பெறமுடியாது.

செப் 2000ல் நமது போராட்டத்திற்குப் பின்னர் உருவான 37A ல் VRக்கென எவ்விதியும் இல்லை. துணைவிதி 11 A பின்னர்தான் சேர்க்கப்பட்டது.

"A permanent Government servant absorbed in a PSU or temporary/ quasi permanent Government servant who has been confirmed in PSU subsequent to his absorption therein, shall be eligible to seek voluntary retirement after completing 10 years of qualifying service with the Government and the PSU taken together, and he or she shall be eligible for pro rata pensionary benefits on the basis of combined qualifying service"

இவ்விதி வந்தவுடனேயே தோழர் குப்தா பென்ஷன் விதிகள் 48 A மற்றும் 48 B க்கு பாரபட்சமாக 11 A தரப்பட்டுள்ளது என்ற பிரச்சனையை எழுப்பி வந்தார்.

48 A 1 " At any time after a Government servant has completed twenty years' qualifying service , he may, by giving notice of not less than three months in writing to the Appointing Authority, retire from service"

48B 1 "The qualifying service as on the date of intended retirement of the Government servant retiring under Rule 48 1 a or 48A ……with or without permission shall be increased by the period not exceeding 5 years, subject to the condition that the total qualifying service rendered by the Govt, servant does not in any case exceed 33 years and it does not take him beyond the date of superannuation"

ஆனால் நமக்கு 48 A 48B பொருந்தாது என்றனர். பின்னர் அங்கீகாரத்திற்கு வந்த BSNLEUம் 5 வருட வைட்டேஜ் 48 A 48B குறித்து தேசிய கவுன்சிலில் விவாதித்தது. ஆனால் 13வது தேசிய கவுன்சிலில் DOPPW நிராகரித்து விட்டது என்ற பதிலை தந்தது நிர்வாகம்.

VR ல் செல்லும் ஊழியருக்கு 5 ஆண்டுகள் வரை வைட்டேஜ் என்ற கோரிக்கை NFTE, BSNLEU சங்கங்களால் தொடர்ந்து எடுக்கப்பட்டும் சாதிக்க முடியாமல் போனது. ஆறாவது ஊதியக்குழு காலத்திற்குப் பின்னர் 48B க்குரிய பலனையே அரசாங்கம் இரத்து செய்துவிட்டது.

"Linkage of full pension with 33 years of qualifying service should be dispensed . Once an employee renders the minimum pensionable service 20 years, pension should be paid at 50 % of the average emoluments received during the last 10 months or the pay last drawn, whichever is more beneficial to the retiring employee. simultaneously, the extant benefit of adding years of qualifying service for computing pension/ related benefits should be withdrawn as it no longer be relevant."

தற்போது டைரக்டர் (மனிதவளம்) 2003 தேசிய கவுன்சிலின் முன்மொழிவு போன்ற ஒன்றை 55 ii c க்கும் பேசுகிறார் என விவாதத்திற்கு சென்ற தலைவர்கள் தெரிவித்து வருகின்றனர். VRயை எதிர்த்துவிட்டோம் என்றும் எழுதி வருகின்றனர். 55 ii cக்கு 5 ஆண்டுகள் வரை வைட்டேஜ் என்ற பிற்சேர்க்கை திருத்தம் போர்டுக்கு மேனேஜ்மெண்ட் கமிட்டியால் வைக்கப்பட்டு அது போர்டால் ஏற்கப்படவேண்டும். போர்டால் ஏற்கப்படும் அந்த CDA திருத்தம் DOTக்கு அனுப்பப்படவேண்டும். DOT அவசியம் என கருதினால் DOPPWக்கும் அது அனுப்பபடலாம். இவ்வளவு நடைமுறை உள்ள பிரச்சனை அது. நாம் மட்டுமே 48 A 48B மூலம் வைட்டேஜ் என கோரிவந்த ஒரு பிரச்சனையை 55 ii c வடிவில் நிர்வாகம் (தனக்கு சாதகம் என்பதால் தான்) முன் முயற்சி எடுத்து தனது நெருக்கடியை

தீர்த்துக்கொள்ள விழைவதாக தெரிகிறது. அம்முயற்சியில் அது வெற்றி பெறுமா என நம்மால் அறுதியிட்டு சொல்லிவிட முடியாது.

பென்ஷன் விதிகள் 48 48 A எல்லாம் 30 ஆண்டுகள் 20 ஆண்டுகள் முடிந்தால் VRல் போக வாய்ப்பு அளிக்கின்றன. அவை வயதை சுட்டி பேசுவதில்லை. FCIல் வயதை சுட்டி பேசுகின்றனர். ஆனால் தகுதி சேவை 33யை தாண்டக்கூடாது என்பது பிரச்சனைக்குரியது.பெரிதாக பலன் கிடைக்காது. நமக்கும் வயதை சுட்டிதான் CDA 55 ii c வரையப்பட்டுள்ளது.

FCI Staff Regulatory Rules 22 2 ii ல் வைட்டேஜ் தரப்படுகிறது.

" Employees by giving 3 months notice retire after 50 years. The qualifying service as on the date of intended retirement of the employee of the Corporation under this provision shall be increased by a period not exceeding 5 years subject to the condition that the total qualifying service rendered by employees does not in any case exceed 33 years and it does not take him beyond the date of superannuation"

இவ்விதி 26-7-90 முதல் அங்கு அமுலாகி வருகிறது. 48B மூலமான பலன்கள் ரத்து என்ற உத்தரவிற்கு பின்னரும் அங்கு இவ்விதி நீக்கப்பட்டதாக தெரியவில்லை

2003 தேசிய கவுன்சில் முன்மொழிவு போன்றதொரு திருத்தம் 55 ii c க்கு வந்தால் தான் வைட்டேஜ் சாத்தியமாகும்.

If any Employee Voluntarily reties Vide 55 ii c , he or she may be considered by giving all the increments , which the official otherwise would have earned by continuing in Service corresponding to the age of superannuation. The pensionary benefits including commutation be settled taking into consideration the additional increments and service weigtage . என்பது போன்ற ஒன்றை திருத்தமாக போர்டு தர வேண்டும். மத்திய அரசின் விதிகளை தேடிக் கொண்டிருந்தால் இது சாத்தியமாகாது

55 ii c ல் ஓய்வு பெற விரும்பும் ஊழியர் வைட்டேஜ் வந்தால் கூடுதலாக பென்ஷன் பலனை பெறுவார் என்பதை தொழிற்சங்க தலைமைகள் புரிந்து கொள்ளவேண்டும். 55 ii c யை அனுமதித்துவிட்டு அதற்கு கூடுதல் பலன்களை பெற முயற்சிக்காமல் இருப்பது சரியான அணுகு முறையாகாது. நமது VRS எதிர்ப்பு கொள்கையை கைவிட்டதாக புரிந்து கொள்ளவேண்டாம். இதை VR Scheme என திணித்தால் நாம் அனைவரும் எதிர்க்கவே உள்ளோம். 2006 முதல் விதியாக இருந்து

வருகின்ற VR Provisionக்கு திருத்தம் என்றும், ஏற்கனவே அமுலில் இருந்து வரும் 55 ii c க்கு பலன்களை திருத்தமாக பெறுவது என்றும் அனைவரும் ஒன்றாக புரிந்து கொண்டால் யாரும் சோரம் போய்விட்டோம் என்ற கேலி வராது.

16-5-11